10வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

விளம்பரம் VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

நதி 11 FEBRUARY 15, 2001 பாலம் 04

❊ தாலி வேலியா? நோய் தடுக்கும் கருவியா? (பக். 5)
❊ இருதட்டு AIR BUS -380 உருவாகிறது (பக். 02)
❊ புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி கொள்வதில்லை (பக். 10)
❊ சுவர்வேண்டும் சித்திரம் வரைய... தமிழன் நிலை உயர... (பக்.06)
❊ இயற்கை சீற்றம் இறைவன் கொடுக்கும் தண்டனையா? (பக். 10)
❊ விடாமுயற்சி, வெற்றி கொடுக்கும் கப்பிறியாடி (பக்.06)
❊ பூமியின் சொந்தக்காரர் யார்? (பக். 09)
❊ வீட்டின் விலையில் 1988/1989 போல 2001/ 2002 இருக்குமா? (பக்.17)
❊ வாழ்வில் வெற்றிபெற RRSP தேவையா? (பக்கம் 11)

RE/MAX Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு! SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- தன்னைப் பாவியென்று நினைப்பவன் பாவியாகி விடுகிறான். தனைன்னைத் தூயவன் என்று உறுதியாக நினைப்பவன் தூயவன் ஆகிறான்.
- வீடெங்குமுள்ள இருளைக் குறித்துக் குறை கூறுவதைவிட ஒரு சிறு விளக்கேற்றி வைப்பது மேல். உலகெங்குமுள்ள கேடுகளைக் குறித்துக் குறைகூறுவதை விட ஒரு சில நலன் செய்வது சிறந்தது.
- ஒரு சீரிய இலட்சியத்தில் நம்பிக்கை வைத்து அதற்காகப் பாடுபடுபவனுக்குச் சிரமம் ஒன்றும் தோன்றாது. சூரிய வெப்பம் சந்திரனது தணுப்புப் போன்று அவனுக்குத் தென்படும்.
- தெய்வத்துக்கு அஞ்சி நடப்பவனுக்கு அஞ்சாமை என்னும் திட்பமுண்டாகிறது.
- எல்லா உயிர்களுக்கும் பணிவிடை செய்கின்றவனே உண்மையில் இறைவனே வணங்குகின்றான்.
- மதவெறி பிடித்தவர்கள் மதத்துக்குப் பெருங்கேடு விளைவிக்கின்றனர்.

## உலக நாடுகள் வரிசையில் நியூகலிடோனியா (NEW CALE-

அவுஸ்திரேலியாவுக்கு வடகிழக்கு மூலையாக தென் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள ஒரு நீள் வடிவில் அமைந்த தீவுப் பகுதியே இந் " நியூகலிடோனியா" ஆகும்.

மொத்த நிலப்பரப்பு: 7359 ச.மைல். இந்த நீள்வடிவ தீவு போன்ற நாட்டுடன் மேலும் மூன்று தீவுகளும், மற்றும் சில தீவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன

மக்கள் சனத்தொகை 2000ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி 201,816 பேர்.

தலைநகரம்: நுமேயா **(NOUMEA)** இந் நீள் வடிவ தீவின் கீழ்ப் பகுதியில் இந் நாட்டின் தலைநகரம் உள்ளது.

தேசிய கொடி: பிரான்ஸ் நாட்டின் தேசியக் கொடியே இங்கும் தேசிய கொடியாகக் கருதப்படுகின்றது.

மொழி: பிரெஞ்சு, Melanesian, Polynesian dialects)

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

தமிழனுக்கு என்றொரு நாகரீகம் இருந்தது என்று சரித்திரம் எழுதத் தொடங்கியுள்ளோம். வெளிநாட்டிற்கு விரும்பியோ, விரும்பாமலோ குடியேறிய நாங்கள், பணம் தான் தேவை அதுதான் வாழ்க்கை என்று என்ன செய்வது என்று தெரியாமல் வாழுகின்றோமா? என்ற கேள்வி தனியாகச் சிந்திப்பவர்கள தங்களிற்குள்ளே கேட்கின்றார்கள். யார் செய்த பாவமோ, பழியோ இந்த நிலைமையில் தமிழினம் வாழ்கின்றது. தாய் ஒரு இடத்தில், தகப்பன் இன்னொரு இடத்தில், ஒவ்வொரு பிள்ளைகளும் வெவ்வேறு நாட்டில் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இன்று இருக்கின்றோம். காலம் கலிகாலமோ? தமிழன் தன் தலைவிதியை பணம் என்ற அவாவில் மாற்றி எழுதிக் கொண்டு இருக்கின்றான். இந்தப் பணத்தின் ஆசை, குடும்பங்களைக் குலைக்கின்றன. காலநேரம், சம்பிரதாயம், சம்பந்தம் பார்த்து செய்த / செய்கின்ற திருமணங்கள் கேலிக் கூத்தாகின்றன. கனேடிய அரசோ, குடும்பங்கள் ஒன்றாக வேண்டும் என்பதற்காக பல சலுகைகள் செய்கின்றது. பணம உழைக்கவேண்டும் என்பதற்காக ஒன்றாக இருக்க வேண்டிய குடும்பங்கள் பிரிகின்றன / பிரிக்கப்படுகின்றன. இதனால் நடக்கக்கூடாத பல விடயங்கள் நடக்கின்றன. 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும்' இது ஒரு சாதாரண குடும்பத்திற்குத தெரிந்த உதாரணம். சரியாக சிந்திப்போம் பண ஆசையால் எதையும் செய்வதைத் தவிர்ப்போம். நல்லதையே சிந்தித்து நல்லதையே செய்வோம். நாளை நமதே.

-நெற்றிக்கண்ணன்



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life
LIBERTY MUTUAL

© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (74)



–விஜே குலத்துங்கம்

2000ஆம் ஆண்டில் பல புதிய இயந்திர சாதனங்களும், விஞ்ஞானக் கருவிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒன்றான **AIRBUS-A380** என்ற விமானத்தைப் பற்றி இந்த இதழில் பார்ப்போம். நாளுக்கு நாள் விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனவே விமானங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமேயானால், விமானங்களின் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும். இதனால் கூடிய பயணிகள் அமர்ந்து செல்லக் கூடியதாக பெரிய விமானங்களை அமைக்கும் முயற்சியில் இந்த **AIRBUS-A380** உருவாக்கப்பட்டது.

**AIR BUS-A380**



நாங்கள் இரட்டைத்தட்டு பஸ் வண்டிகளை இலங்கையில் 70பதுகளில் வரையில் கண்டிருக்கிறோம். இங்கிலாந்தில் இன்னும் ஓடிக் கொண்டிருக்கின்றது. இங்கு ஒன்டாரியோவில் குறிப்பாக டொரன்டோ பகுதிகளில் ஓடும் **"Go" Train** இரண்டு தட்டுகள் கொண்ட புகையிரதம் ஆகும். இதுவரை காலமும் இருந்த ஆகப் பெரிய பயணிகள் விமானமான **BOEING-747** இல் முற்பகுதியில் மாத்திரம் முதலாம் வகுப்பு பயணிகளுக்காக ஒரு சிறிய பகுதி இரண்டு தட்டுகளாக இருந்தது. ஆனால் இந்த புதிய **AIRBUS-A380** இல் முழு நீளப் பகுதியும் இரண்டு தட்டுகளாக உள்ளன.


இந்த விமானத்தின் பிரதான உடற்பகுதி, இதுவரையிலும் இருந்த ஆகப் பெரிய விமானமான **BOEING** 747-400ஐ விட பெரியதாகவும், நிலப்பரப்பு 49% அதிகமாகவும், 35% அதிக இருக்கைகளுக்கும் தனித்தனியே இரு பக்கமும் கை வைப்பதற்காக கைத்தாங்கிகள் **(ARM REST).** தற்போதுள்ள விமானங்களில் அருகருகே இருப்பவர்களுக்கு பொதுவாகத்தான் கைத்தாங்கிகள் உள்ளன.

**A380 இன் உள் அமைப்புகள்**



இந்த **A**30 விமானத்தில் உலகத்திலே ஆகப் பெரிய **CABIN** என்று சொல்லப்படும் விமானிகளின் அறையும், இயந்திர சாதனங்கள் கருவிகள் உள்ள **Cock pit** உம் காணப்படுகின்றன. விமானத்தின் கீழ் தட்டில் மலசல கூடங்கள், **Shower** வசதியுள்ள குளிக்கும் இடங்கள், படுக்கை வசதியுள்ள **Sleeping Cabins** கள், மதுபானம் விற்பனை செய்யும் **Bar,** இருந்து பார்க்கக் கூடிய சிறு படமாளிகை, சூதாட்டம் விளையாடக் கூடிய **CASINO** போன்றவையும், வியாபாரம் சம்பந்தப்பட்ட பயணிகள் கூட்டங்கள் வைப்பதற்கு அறைகள் போன்றவையும் காணப்படுகின்றன.

இந்த விமானங்கள் 150 தொன்கள் நிறையை 10,400 கிலோமீற்றர் தூரத்திற்கு அதிகமாக எடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கும். 555 பிரயாணிகள் இந்த விமானத்தில் ஒரு நேரத்தில் பயணம் செய்யலாம். இந்த விமானம் சென்ற ஆண்டு ஜுன் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுமக்களின் பாவனைக்கு 2004ஆம் ஆண்டளவில் தான் வரவிருக்கின்றது. அறிமுகப்படுத்தப்பட்டு 6 மாதங்களுக்குள் 6 வெவ்வேறு விமானப் பயணிகள்சேவை நிறுவனங்களில் இருந்து 50 விமானங்களுக்கு ஓடர்கள் கொடுக்கப்பட்டு விட்டன. பாரத்தைக் குறைப்பதற்காக இதன் இறக்கைகள் பிரதான பகுதியில் சேரும் இடத்தில் **Carbon Fibre Composite** என்னும் பதார்த்தத்தால் செய்யப்பட்ட இணைப்பு உள்ளது. விமானத்தின் மேற்பகுதி முழுவதும் பல படைகள் கொண்ட ஒரு விசேட **Laminate** கலப்பு உலோகத்தினால் செய்யப்பட்டுள்ளது. இது சாதாரண நிறையை விட 25 வீதம் குறைவானது. இதன் உற்பத்தியாளர்களின் கூற்றுப்படி இந்த விமானம் 1 பிரயாணியை 1 மைல் தூரத்திற்கு கொண்டு செல்லும் செலவு மற்றைய விமானங்களை விட குறைவானதாகும்.



**A380 இன் உள்அமைப்புகள்**

ஆயினும் பல்வேறு விமான நிலையங்களின் அதிகாரிகள் இந்த விமானங்களை கையாளுவதில் சிக்கல்கள் ஏற்படும் என கூறியுள்ளார்கள். விமான ஓடு பாதையில் இருந்து, விமான நிலையத்திற்கு வரும் **Taxi** எனப்படும் பாதை, தற்போதைய அளவில் இந்த விமானங்களுக்கு போதாதவை என்றும் இவை அகட்டப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். மேலும் ஒரே நேரத்தில் அதிக பயணிகள் வந்திறங்குவதாலும், ஏறுவதாலும் விமான நிலையத்தின் சுங்கப் பகுதி, குடிவரவுப் பகுதி, **Check-in** பகுதிகளில் சன நெருக்கடி ஏற்படும் என்றும், விமான நிலையத்திற்கு செல்லும் வீதிகளிலும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் எனவும் கூறுகின்றார்கள். ஏற்படும் எனவும் கூறுகின்றார்கள்.


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 115

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | | ■ |
| | 4 | ■ | | ■ | | ■ | 5 |
| | ■ | ■ | ■ | ■ | | 6 | ■ |
| 7 | | 8 | | | ■ | ■ | |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| | ■ | | ■ | | | | 9 |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| | | 10 | ■ | | 11 | | 12 |

**இடமிருந்து - வலம்**

1. தமிழீழத் தலைவரைச் சந்தித்த நோர்வே நாட்டு தூதுவரின் முழுப்பெயர்
4. தொடு (வல-இட)
5. அரசன்
6. வானம் (வல-இட)
7. தைரியம்
9. பொறுமை (வல - இட)
10. இரகசியம் (வல -இட)
12. இருப்பிடம் (வல -இட)

**மேலிருந்து கீழ்**

1. உதாரணம்
2. மரங்கள் மிகுந்த இடம்
3. உதவி செய்
4. குதிரை (கீழ்-மேல்)
5. பசு
8. பேரழகு
11. போர் (கீழ் -மேல்)
12. மகிழ்ச்சி (கீழ் -மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் **FEBRUARY 26, 2001**க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஈ | ழ | வே | ந | த | ன் | ■ | அ |
| ர் | ■ | த | ■ | ■ | த | ண் | மை |
| க் | ■ | ன | ■ | ■ | ந் | ■ | தி |
| கு | ரு | ம் | பை | ■ | வே | தி | ■ |
| ■ | ■ | ■ | ■ | ■ | கை | கொ | டு |
| மு | ரு | ங் | கை | ■ | ங் | ■ | பா |
| ள் | ■ | ■ | க் | ■ | ல | ■ | ப் |
| ளி | ள் | வ | ச | ரா | இ | ■ | சா |

**114இல் வெற்றி பெற்றோர்**

1)S. Puvanendran, Scarborough, Ont.
2) B. Thushanthanan, Scarborough, Ont.



*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*




**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ **261-6883**


## AIR BUS -"BELUGA"



பொதி ஏற்றும் விமானம்

இந்த **Airbus** நிறுவனத்தின் இன்னுமொரு தயாரிப்புத்தான் உலகத்தின் ஆகப்பெரிய பொதிகள் ஏற்றிச் செல்லும் **FREIGHTER AIRCRAFT** ஆகும். இதன் பெயர் **AIRBUS A-300-600ST. SUPER TRANSPORTER.** இதற்கு ஒரு செல்லப் பெயரும் கொடுத்துள்ளார்கள். அது **"BELUGA"** ஆகும். இந்த விமானம் பெலூகா என்ற திமிங்கிலத்தைப் போல் இருப்பதால் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட சர்வதேச விண்வெளி நிலையத்தின் மிகப் பெரிய உதிரிப் பாகத்தை கென்னடி விண்வெளி நிலையத்திற்கு கொண்டு செல்ல இந்த விமானம் விசேடமாக ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவிற்கு வரவழைக்கப்பட்டது. இந்தக் கருவி 21 அடி நீளமானதும், 15 அடி விட்டமும் 4.5 தொன் நிறையுடையது. இந்த பாகத்தை கொண்டு செல்ல இந்த **"BELUGA"** விமானத்தினால்தான் முடியும். இந்த விமானம்,விமானங்களையே ஏற்றிச் செல்லக் கூடியதாக உள்ளது.

தற்போது 5 **Beluga** விமானங்களே சேவையில் உள்ளது. இந்த விமானம் 184 அடி நீளமாகவும், 147 அடி அகலமாகவும் 56 அடி உயரமாகவும் உள்ளது. இந்த **Airbus** இன் பல்வேறு விமானங்களைப் பற்றி அறிய வேண்டுமாயின், **www.airbus.com** என்ற வெப்தளத்தில் (**web**) பார்க்கவும்.

இந்த கட்டுரையை எழுதும் போது, **BOEING** நிறுவனம் 800 பேரை ஏற்றிச் செல்லும் விமானம் ஒன்றை தயாரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இதன் இறக்கைகள் முழு இடமும் பரந்து வௌவால் வடிவமாகவும் இருக்கும். இதைப் பற்றிய மேலதிக தகவல்களை வரும் இதழ்களில் பார்க்கலாம்.


**"அறிவும் ஆக்கமும்"** பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை வீஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ hotmail.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.

Apple Apple Apple Apple Apple Apple

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## மனிதனும் தெய்வமாகலாம்

நயினையம்பதி நா.க. சிவராமலிங்கம்

குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன் - பரிணாம வளர்ச்சியின் சிறப்பு உயிரி அவன். சிந்திக்கத் தெரிந்த அவன் அம்புலியை அடைந்துவிட்டது அண்மைய விந்தை நிகழ்வு. அறிவின் உத்தியை அவன் அடைந்துவிட்ட போதிலும் குரங்குக் குணம் அடிக்கடி தலைகாட்டிக் கொள்வதால் அவன் அதள பாதாளத்திற்கு தள்ளப்படுகின்றான். அதனால் அருவருப்பு மிக்க பிராணியாக ஆகிவிடுகின்றான். இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்ட அழிவுகளை விட மனிதனின் அசுரத்தன்மையால் ஏற்பட்ட அழிவுகள் அதிகம் என்றால் மிகையில்லை.

மானிடச் சட்டை போட்டவர்கள் எல்லோரும் புறத் தோற்றத்தால் மனிதர்கள் என்றாலும் வள்ளுவர் கூறியது போல்

“மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்” (குறள்-1071)



என்பதற்கமைய எம்மத்தியில் புல்லுருவிகளும் உள்ளனர். எனவே மனித உருவைக் கொண்டு எல்லோரும் மனிதத்துவம் உடையவர் என்று எண்ணிவிட முடியாது. மனிதத்துவம் கெடும் போது அவன் வாய் இல்லாச் சீவராசிகளைக் காட்டிலும் பேயாட்டம் ஆடி, சமூகத்திற்கு நோயாக மாறி மனித வாழ்வு தேய்வடைய வழி செய்கின்றான்.

ஒன்பது வாசல் கோட்டையான இந்த மனித உடல் அரிதின் முயன்று பெற்ற ஒன்றாகும். “அரிது அரிது மானிடர் ஆதல் அரிது” என்றார் ஔவையார். மானிட யாக்கை வீணை போன்றது. அதனை மீட்டத் தெரிந்தவர் மீட்டினால் இன்னிசை பரவசம். தெரியாதவர் மீட்டினால் அபசுரமே பிறக்கும். எனவே அதனை அன்பின் நிலைக் களனாக ஆக்கலாம். அத்துடன் அறிவின் விளக்கமாகவும் ஆக்கலாம். அருள் ஒழுக்கத்தின் வழி இறைவனின் கோயிலாகவும் ஆக்கலாம். அங்ஙனமின்றி அதனை குப்பைத் தொட்டியைவிட மிகக் கேவலமானதாகவும் ஆக்கலாம். இது இயக்குவோரின் ஆற்றலையும் தகுதிப்பாட்டையும் பொறுத்தது.

“நல்ல தோர் வீணை செய்தே - அதை
நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ”

என்று கழிவிரக்கம் கொள்கின்றார் பாரதியார்.

குலப் பிறப்பு நலம் தருவது என்பது வள்ளுவர் கருத்து “குலத்தளவே ஆகுமாம் குணம்” என்பதற்கமைய ஒருவனுடைய செயற்பாடுகள் அவனது குலத்தை குறிப்பிட்டுவிடுகின்றன. ஆனால் நல்ல குலத்தில் பிறந்தவரும் தனது புற நடை ஒழுக்க முறையால் அக்குலத்திற்கு மாசு ஏற்படுத்தியும் விடுகின்றார். “இதனை குலத்தை கெடுக்க வந்த கோடரிக் காம்பு” என்பர் இருந்தும் “குடிப்பிறந்தார் குணமெனும் குன்றேறி நிற்பர்” என்பது தெளிவு.


## DAYCARE

- 3 மாதம் - 6 வயதுச் சிறுவர்களுக்குச் சிறந்த பராமரிப்பு.
- காலை 7.00 மணி - மாலை 6.00 மணிவரை.
- இருநேர உணவும், பிற்பகல் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
- வயதுக்கேற்ப கணிதம், தமிழ், ஆங்கிலம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிக்கப்படும்
- விளையாடத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன.

★கட்டணம்:-
Week - $ 40.00
Day - $ 10.00
1 Hr - $ 1.50



தொடர்புகளுக்கு: 416-335-5578
McCowan / Sheppard
#704, 360 Pitfield Rd.
Scarborough, ON.

## திருமண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி: 416 261-6219
Email:ratnam51@hotmail.com

## கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(45)

கடந்த அத்தியாயத்தில் வாகனம் செலுத்தும் போது வீதி ஒழுங்குகளை மீறி தண்டனை ரிக்கற் பெற்றோர் அது தொடர்பாக நீதிமன்றத்தில் இவ் வழக்கினை தாமாக முன் எடுத்து நடாத்துவது. (ஆங்கில மொழி என்பது இங்கு பிரச்சனையில்லை என்பது முக்கியம்)
அதில் விசாரணையில் சாட்சி வழங்குபவர்களை குறுக்கு விசாரணை செய்வது வாதங்களை எப்படி முன் வைப்பது போன்ற விடயங்களை ஆய்வு செய்தோம்.

வழக்கினை முன் எடுத்து செல்லும் போது குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டால் அடுத்ததாக யாது செய்வது என்பதனை இவ் அத்தியாத்தில் தொடர்வோம்.

குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டால் தாங்கள் இரு முடிவுகளில் ஒன்றுக்கு வந்தேயாக வேண்டும்.

1) தண்டனையினை குறைப்பதற்காக தங்களை பற்றிய கருணை காட்டும் சில தகவல்களை சமர்ப்பிப்பது
2) வரங்கிய தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்வது.

## தண்டனையினை குறைப்பதற்காக தங்களை பற்றிய சில கருணை காட்டும் சில தகவல்களை சமர்ப்பிப்பது

வீதி ஒழுங்கு சட்டங்களை மீறிய தவறுகளுக்கு அனேகமாக பணத்தண்டனை, அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ரத்து செய்தல், புள்ளி மதிப்பீட்டு இழப்புகள், போன்ற தீர்ப்புகளே கிடைக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

வாகனம் செலுத்துவதில் மேற்கொள்ளும் கிறிமினல் குற்றங்களுக்கே சிறைத்தண்டனை போன்றவற்றினை எதிர் கொள்ள வேண்டி வரும்.

தண்டனை வழங்குவதற்கு முன்பாக சமாதான நீதிபதி வழங்க போகும் தண்டனை தொடர்பாக குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்ட தங்களிடமும், அரச வழக்கு தொடுநரிடமும் அபிப்பிராயம் தண்டனை தொடர்பாக கேட்ட பின்பே முடிவுக்கு வருவார்.

இந் நிலமையில் தண்டனையினை குறைத்து கொள்வதற்கு தங்களை பற்றிய பின்வரும் அம்சங்களை தாங்கள் சமர்பிக்கும் போது அது தங்களுக்கு தண்டனையினை குறைக்க சந்தர்ப்பமாக அமையும்.

1) தங்கள் வேலைவாய்ப்பு நிலமையும் நிதி நிலைமையும். (வேலை இல்லாத நிலைமை, அல்லது வருமானக்குறைவு, அல்லது பணம் இல்லாத நிலைமைகளை ஆதார பூர்வமாக குறிப்பிடலாம்)
2) தாங்கள் இருக்கும் இடமும் தங்களில் ஏராளமானோர் தங்கி வாழும் நிலைமை ஏற்பட்டால் அதனால் ஏற்படும் நிதி நிலைமை கஸ்ரங்கள் தொடர்பான ஆதாரங்கள்
3) ஏற்கனவே தங்கள் சாரதி ஒழுங்கு, வாகனம் செலுத்துவதில் உள்ள ஒழுங்கு முறை தொடர்பான நல்ல பதிவுகள், வரலாறுகள்.

அதாவது ஏற்கனவே இத்தகைய ஒரு குற்றத்தினை ஒரு போதும் செய்யவில்லை என்ற அம்சம்.

ஆனால் தங்கள் பதிவுகள், வர்லாறுகள் தொடர்பாக சமர்ப்பிக்கும் விடயங்களில் முரணாக அரச வழக்கு தொடுநர் சமர்ப்பித்தால் அரச வழக்கு தொடுரின் வாதம் மட்டுமே இங்கு நீதிமன்றத்தில் எடுபட சாத்தியம் உண்டு என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும். இல்லையெனில் வழக்கு தொடுநரின் ஆதாரங்களுக்கு முரணாக வலுவுள்ளதாக தங்கள் ஆதாரம் நிரூபிக்கபடல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடங்கள் யாவும் தங்களுக்கு எதிராக வழங்க போகும் தீர்ப்பில் கருணை காட்டப்படும் சில கோரிக்கைகள் ஆகும்.

இந்த சந்தர்ப்பத்தில் இச் சட்டபிரிவில் உள்ள மிக குறைந்தளவு பண தண்டனையினை சமாதான நீதிபதி தங்களுக்கு வழங்குவார்.

தீர்ப்பு வழங்கி பதினைந்து நாட்களுக்குள் தண்டனை பணத்தினை பொதுவாக செலுத்திவிடல் வேண்டும். பணம் செலுத்துவதில் இக் குறிப்பிட்ட பதினைந்து நாட்களுக்குள் ஏதாவது சிரமம் இருந்தால் மேலதிக நாட்கள் அல்லது பகுதி பகுதியாக செலுத்தும் வசதி தருமாறும் அந்த தீர்ப்பு நேரம் கோரலாம். இத் தவணை மூன்று மாதத்திலிருந்து ஆறுமாதம் வரை பொதுவாக இருக்கும்.


Neelam SILK

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க



- முகூர்த்தப்பட்டுப் புடவைகள் * பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread work பட்டுப்புடவைகள் * ரிசு சேலைகள
- காஞ்சி 2000 ரிசு சேலைகள் * Emboss Tissue சேலைகள்
- Cut work சேலைகள் * அபூர்வா 2000 cut work

மைசூர் சில்க் சேலைகள், சோனா, மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் தரமான பட்டுப்புடவை மாளிகை"

"நீலம் சில்க்"

TEL: (416) 778-7455 FAX: (416) 778-8484
1453 GERRARD STREET EAST (INDIAN Bazzar)




AVIS® RENT A CAR

We try harder

- Daily, weekly, weekend and monthly rates
- Unlimited km, rates available on cars
- Large selection of vehicles
- Emergency road service
- Major credit cards accepted

Great Rates
Quality Service.
We feature GM products

FOR RESERVATIONS & DETAILS CALL:
1-800-879-2847



தமிழில் சேவைக்கு

விக்கி ☎: (416)441-1818
1345 Lawrenve ave. E
Scarborough, ont.

அரவிந்தன் ☎ :(416)724-2847
4352 Kingston Rd,
Unit 78
Scarborough, Ont

JOHN ☎ (416) 233-2847
5481 Dundas St. W
Etobicoke, Ont.


தண்டனை பணத்தினை குறிப்பிட்ட காலத்தினுள் செலுத்த தவறினால் போக்குவரத்து அமைச்சிலிருந்து தங்கள் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டு விட்ட அறிவிப்பு வரும்.

அடுத்த கட்டுரையில் இத் தீர்ப்புக்கு எதிராக அப்பீல் பண்ணுவது என்ற விட.யத்தினை ஆய்வு செய்வோம்.


தொடரும்......

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
**(Professional Licensed Instructor In Car & Class Room)**

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 06

*-Dr. N. S. Moorthy Ph.D*



பண்டைத் தமிழர் வாழ்க்கை முறையுடனும், மதச் சடங்குகளுடனும் காணப்படும் சில முக்கிய விடயங்களில் ஆழ்ந்து நோக்குகையில் அக்குபங்சர் சிகிச்சை முறை எமது வாழ்க்கையுடன் இணைந்து விளங்குவதை சென்ற இதழில் பார்த்தோம். இவை பற்றிய மேலதிக விடயங்களை இந்த இதழில் பார்ப்போம்.

## காவடி ஆட்டம்:

காவடியெடுத்தல் தமிழர்களுக்குரிய ஓர் சமயச்சடங்காகும். சைவக் கோயில்களில் அதிலும் முருகன் ஆலயங்களில் காவடியாட்டம் ஓர் சிறப்பு நிகழ்ச்சியாகவே நடைபெறுகின்றது. முதுகின் இருபக்கமும் கூரிய வெள்ளிக் கொளுக்கிகளைக் குத்தி அவற்றைக் கயிற்றில் கட்டி ஒன்றிணைத்து இழுத்து ஆடுதல் பார்ப்போரைப் பக்திப்பரவசத்தில் ஆழ்த்தும் நிகழ்ச்சியாக அமைந்தாலும் அடிப்படையில் ஓர் சிகிச்சையாகவே கொள்ளப்பட்டிருக்க வேண்டும். முதுகு எலும்பின் இரண்டு புறங்களிலும் உடலின் பல பகுதிகளை இயங்கவைக்கும் முக்கிய நரம்புகள் செல்கின்றன. அதுமட்டுமல்லாது அக்குபஞ்சர் முறையில் முக்கிய சக்தியானது இப் பகுதியினூடாகப் பாய்ந்து மூத்திரப்பையை **(Urinary Bladder)** அடைகிறது எனப் கூறப்பட்டுள்ளது. முதுகுவலி **(Backache)**, இடுப்பு வலி **(Lumbago)**, ஆண்மைக் குறைவு **(Impotence)**, சிறுநீரக நோய்கள் **(Urinary Problems)**, மூல நோய் **(Piles)** போன்ற பல்வேறுபட்ட நோய்நிலைகளும் மேற்கூறிய முதுகின் இரு புறங்களிலும் ஊசிகள் செலுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது அக்குபஞ்சர் முறையில் இதனால்தானோ என்னவோ பண்டைத் தமிழ் மக்கள் மேற்கூறப்பட்ட நோய் நிலைகள் தம்மை அணுகாவண்ணம் தமது உடலை உரிய சுக நிலையில் வைத்திருப்பதற்கும், ஏற்பட்ட நோய்கள் மறைந்து போவதற்கும் உரிய சிகிச்சையாக முள்ளுக்குத்திக் காவடியெடுத்து ஆடுதலை தமது மதக் கடமையாக கொண்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு.

இதே போன்றே துலாக் காவடி எனப்படும் முதுகில் துளையிட்டுத் தாங்கும் வணக்க முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



தமிழ்ப்பெண்களைப் பொறுத்த வரை "தாலி" என்பது அவர்களது மிகப் பெறுமதி வாய்ந்த ஆபரணமாகக் கொள்ளப்படுவது. தங்கள் கணவரது உயிரையொத்த தாலியை அவர்கள் தம் உயிரினும் மேலாக மதிப்பார்கள். "தாலி பெண்ணுக்கு வேலி" என்பது பழமொழி. இத்தகைய உன்னத இடத்தைப் பெறும் இவ் ஆபரணம் சங்கிலியிலோ, மஞ்சள் கயிற்றிலோ, தாலிக் கொடியிலோ கோர்க்கப்பட்டு இரு மார்பகங்களுக்கும் இடையில் நடுநெஞ்சை தொடும் வண்ணம் அணியப்படுகிறது. அக்குபஞ்சர் மருத்துவ அறிவியலின் படி இரு மார்பகங்களக்கும் நடு மத்தியில் காணப்படும் புள்ளியானது சுவாசப்பைகள், இருதயம் ஆகியவற்றைத் தூண்டக் கூடியதாக அமைந்துள்ளது. சுவாச நோயான மூச்சுக் கஷ்டம் நீங்குவசற்குரி சிகிச்சையின் போது இப் புள்ளியில் ஊசி செலுத்தப்படுகிறது. இதன் மூலம் தீவிர மூச்சுக் கஷ்ட நிலை சீரடைகின்றதைக் காணக் கூடியதாகவுள்ளது. அது மட்டும்லாது இதயத்தை உரமாக்கவும் நோயிலிருந்து பாதுகாக்கவும் உரிய முக்கிய புள்ளியாக இது காணப்படுகின்றது. இக் காரணங்களினால் தானோ என்னவோ தன் உயிரினும் மேலான கணவனால் திருமண அடையாளமாக அணிவிக்கப்பட்ட தாலியை தன் மார்பில் அணிகின்றாள் தமிழ்ப் பெண். மேற்படி உலோகத்தாலான தாலி குறிப்பிட்ட புள்ளிளை ஸ்பரிசித்து தூண்டுவதன் மூலம் இருதய, சுவாச நோய்கள் தடுக்கப்படுவதுடன் ஏற்பட்ட நோய்களும் நீங்கி சுகமான இல்லற வாழ்வு நிலைபெறுகின்றது எனப் கொள்ளலாம். கணவனை இழந்து தாலியை இழக்கும் பெண்கள் தங்கள் வாழ்வின் உயிரோட்டமே நின்று போன நிலையை அடைகிறார்கள். தமிழர்களின் கலாசாரமாக மேற்கொள்ளப்படும் தாலியில் மருத்துவப் பண்பும் அடங்கியுள்ளதோ எனப் கொள்ள இடமுண்டு.

## மேகலாபரணம்: (மேகலை)

பழந்தமிழ் பெண்கள் தமது இடையில் மேகலாபரணம் எனும் ஆபரணத்தை அணிந்து வந்துள்ளார்கள்.



தற்காலத்தில் இது நடைமுறையில் இல்லாவிட்டாலும் திருமண வைபவங்களிலும் நாட்டிய நிகழ்ச்சிகளிலும் ஒட்டியாணம் எனும் இடைப்பட்டி ஆபரணமாக அணியப்படுவது தற்போதும் நடைமுறையில் இருந்து வருகின்றது. இடுப்புப் பிரதேசம் பெண்களைப் பொறுத்தவரை ஓர் முக்கிய இடமாகும். குழந்தையை தாங்கும் கருப்பை கரு முட்டைகளை உருவாக்கும் உறுப்புக்கள் போன்றவை பெண்மைக்கே உரிய சிறப்பம்சங்களாகும். மாதவிடாயை தோற்றுவிக்கும் முக்கிய சுரப்புக்கள் இப்பகுகதிகளிலேயே சுரக்கப்படுகின்றன. பெண்மைக்குரிய குரல் மாற்றம் நளினம் மென்மை உறுப்புக்களின் வளர்ச்சி ஆகிய செயற்பாடுகளுக்கும் இவை பொறுப்பாக உள்ளன. இடுப்புப் பிரதேத்தின் முன்னும் பின்னுமாக பாலியல் மாற்றங்களக்குரியதும் மூத்திரப்பை, சிறுநீரகம், கருப்பை ஆகியவற்றுக்குரியதுமான அக்குபங்கர் சக்திப் பாதையில் செல்கின்றன. இவற்றின் மேலாக இடையின் தோற்பகுதியல் மேற்படி மேகலாபரணம் அணியப்படுவதன் மூலம் பெண்மைக்குரிய தன்மைகள் தூண்டப்படுவதுடன் மாதவிடாய் ஒழுங்குபடுத்தப்பட்டு கர்ப்பாசய நோய்கள் தடுக்கப்படுகினன்றன எனக் கொள்ளலாம். இம் மருத்துவக் காரணமே பின்னர் கலாசாரமாக பரிணமித்திருக்காலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

தொடரும்......

**Safety Truck**

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்
(13 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
*2381 EGLINTON AV. E.*
*KENNEDY/ EGLINTON, SCARBOROUGH*

# விளையாட்டுத் தகவல்கள் (70)

-எஸ். கணேஷ்



## 2001 அவுஸ்திரேலியன் OPEN TENNIS


GRAND SLAM போட்டிகளில் ஒவ்வொரு வருடமும் முதல் தொடங்கப்படுவது AUSTRALIAN OPEN ஆகும். 2001ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதியில் இருந்து 28ஆம் திகதி வரை இச் சுற்றுப் போட்டிகள் அவுஸ்திரேலியாவின் இரண்டாவது பெரிய நகரமான மெல்பேர்ண் இல் இனிதே நடைபெற்று முடிந்தன. ஆண்கள் பகுதியில் அகாசியும் பெண்கள் பிரிவில் JENNIFER CAPRIATI உம் CHAMPION பட்டத்தை பெற்றனர்.



ஆண்கள் பிரிவில் அகாசியின் வெற்றி எதிர்பார்க்கப்பட்டது ஒன்றேயாகும். ஆனால் பெண்கள் பிரிவில் எவருமே எதிர் பார்க்காத வகையில் கப்பிறியாடி வெற்றி பெற்றமை ரெனிஸ் ரசிகர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது போல் உள்ளது. கப்பிறியாடி வெற்றி பெற்றது உலகித்தில் முதல் தரத்தில் உள்ள MARTINA HINGS ஐ ஆகும். அதுவும் 6-4, 6-3 என்று பெரு வெற்றியை பெற்றுள்ளார். இதன் மூலம் உலகத்தில் பெண்கள் பிரிவில் 12வது இடத்தில் உள்ள கப்பிறியாடி 7வது இடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார். 1991ஆம் ஆண்டு உலகத்தில் 6வது இடத்தில் இருந்த கப்பிறியாடி 8 வருடங்களிகன் பின்பு மீண்டும் 7வது இடத்தை எட்டி பிடித்துள்ளார். இவரது வெற்றி இவரது விடா முயர்ச்சிக்கும் அயராத உழைப்பிற்கும் கிடைத்த முழு வெற்றியாகும்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு பல பிரச்சனைகளில் அகப்பட்டிருந்த கப்பிறியாடி TENNIS உலகில் இருந்து ஒதுக்கப்பட்டு இருந்தார். ஆனால் அவ விடவில்லை. மீண்டும் மீண்டும் போட்டிகளில் தொடர்ந்து பங்கு பற்றினார். 1976ஆம் ஆண்டு MARCH 29ஆம் திகதி NEWYORK நகரில் அமெரிக்காவில் கப்பிறியாடி பிறந்தார். 24 வயதுடைய கப்பிறியாடி இது வரை 9 CAREER TITLES பெற்றுள்ளார். 1991ஆம் ஆண்டு WIMBLEDON இலும் US OPEN இல் அரை இறுதியாட்டத்தில் கப்பிறியாடி தோல்வியுற்றது. இன்னும் ரெனிஸ் ரசிகர்களின் மனதைவிட்டிகலாதது. சென்ற வருடம் AUSTALINAN OPEN இல் அரை இறுதியாட்டத்திலும் FRENCE OPEN இல் முதல் சுற்றிலும் விம்பிள்டனிலும் US OPEN இலும் 4வது சுற்றுலும் தோல்வி கண்டார்.

ஆண்கள் பிரிவு CHAMPION
ANDRE AGASSI (USA)



30 வயதுடைய அமெரிக்கரான அகாசி தற்போது உலகத்தில் முதல் இடத்தை வகிப்பது ஆவார். 2001ஆம் ஆண்டு AUSTRAIAN OPEN TITLE இவருடைய 7வது GRAND SLAM, TITLE ஆகும். 1995, 2000, 2001 ஆகிய மூன்று வருடங்களிலும் அகாசி AUS. OPEN ஐப் பெற்று உள்ளார். அத்துடன் 1999 FRENCH OPEN இல் 1992 ஆம் ஆண்டு WIMBLEDON உம் 1994, 1999 US OPEN ஐயும் பெற்றுள்ளார்.

## கிரிகெட்- ஸ்ரீலங்கா கிரிகெட் அணி பெருவெற்றி

"விழுந்தாலும் மீசையில் மண் பிரளவில்லை" என்பதை போல தென் ஆபிரிக்க கிரிகெட் அணியிடம் பலத்த அடி வாங்கிய ஸ்ரீலங்கா கிரிகெட் அணி, நியூசிலாந்து அணிக்கு நியூசிலாந்து மண்ணில் வைத்து பலத்த அடி கொடுத்துள்ளது. நியூசிலாந்து அணியை வென்றதன் மூலம் ஸ்ரீலங்கா அணி மீண்டும் தலை நிமிர்ந்து கொண்டது என்று சொல்ல முடியாது. ஏனெனில் அண்மை காலங்களில் நியூசிலாந்து அணியின் ஆட்டங்கள் திருப்திகரமாக இல்லை. "விழுந்தவன் மேல் ஆனை மிதிச்ச மாதிரி" மோசமாக விளையாடிக் கொண்டிருக்கும் நியூசிலாந்து அணிக்கே இலங்கை அணி பலத்த அடி கொடுத்துள்ளது. அடுத்து இங்கிலாந்து இலங்கை அணியுடன் மோத இருக்கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். இலங்கை அணிக்கு வெற்றிகளா? தோல்விகளா?

1ST-ODI ஆட்டம் JAN. 31/2001
ஸ்ரீலங்கா:- 50 ஓவர்கள் 8விக்கெட் 213 ஓட்டங்கள்
நியூசிலாந்து:- 42.5 ஓவர்கள், ALLOUT, 152 ஓட்டங்கள் .
தமிழ் வீரன் முரளிதரன் 5விக்கெட்டுக்கள் அத்துடன் MAN OF THE MATCH விருதும் முரளிக்கே வழங்கப்பட்டது.


Tel: (416) 335-4070
NEW Technology
Security and Sound Inc.
Fax: (416) 335-9936
தமிழர் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும் எங்கள் ஸ்தாபனத்தின்
மாபெரும் மலிவு விற்பனை
Car Alarm & Installed $99.99
$199.99 Car Alarm and Starter & Installed
PIONEER CD-PLYER ON SALE !!! $199.99
STEREO, SPEAKER, TWETTER, AMPS, SUBWOOFER, FOG LAMPS, SIDE MARKER, PAGER & MUCH MORE
AVITAL
Ultra Start
CLIFFORD The Science of Security
VIPER
Pioneer
Audiobahn
* We also do any Electrical work.
New Technology Security & Sound Inc.


Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3


2ND-ODI ஆட்டம் FEB .03/2001
நியூசிலாந்து:- 50 ஓவர்கள் 8விக்கெட் 205 ஓட்டங்கள்
ஸ்ரீலங்கா:- 48.3 ஓவர்கள் 7விக்கெட் 206 ஓட்டங்கள் மற்றைய தமிழ் வீரரான ரசல் ஆனோல்ட் MAN OF THE MATCH விருது பெற்றார். ரசல் 78 ஓட்டங்கள் எடுத்தார்.

3RD ODI FEB. 06/2001
நியூசிலாந்து:- 45.4 ஓவர்கள் ALLOUT, 181 ஓட்டங்கள்
ஸ்ரீலங்கா:- 29.5 ஓவர்கள் 1விக்கெட் 182 ஓட்டங்கள் ஜெயசூரியா 103 ஓட்டங்கள் பெற்று MAN OF THE MATCH விருது பெற்றார். இவர் 83 பந்துகளை சந்தித்து 10 பவுண்ரிகளையும் 6 சிக்சர்களையும் அடித்தார். உலகத்தில் FASTEST ODI சதத்தை ஒருபந்து மூலம் தவற விட்டுள்ளார். CHRIS CARINS 74 பந்துகளில் FASTEST சதத்தை அடித்தார். ஜெயசூரியா 75 பந்துகளில் FASTEST சதத்தை அடித்துள்ளார்.

4TH ODI FEB. 08/2001
நியூசிலாந்து:- 35 ஓவர்கள் 9விக்கெட் 182 ஓட்டங்கள்
ஸ்ரீலங்கா:- 31 ஓவர்கள் 5விக்கெட் 155 ஓட்டங்கள் ஸ்ரீலங்கா அணி D/L METHOD மூலம் 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

5TH ODI FEB-11/2001
நியூசிலாந்து:- 50 ஓவர், 6 விக்கெட்டுக்கள், 282 ஓட்டங்கள்
ஸ்ரீலங்கா:- 49.2 ஓவர்கள், Allout, 269 ஓட்டங்கள, அத்தபத்து 76, ரசல் ஆனோட் 51, ஜெயவர்த்தன 46 ஓட்டங்கள்.
கடந்த ஐந்து ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் இலங்கை அணி 4:1 என்ற வீதத்தில் இத்தொடரை வெற்றி கொண்டுள்ளது.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

1983ஆம் ஆண்டு வெளியான படங்களின் தொடர்ச்சி

சரிதா



"கொக்கரக்கோ" கங்கை அமரன் டைரக்ஷனில் உருவான இப் படம் சிறந்த கதையமைப்பைக் கொண்டிருந்தும் பெரிதாக எடுபடவில்லை. சமீபத்தில் 2000ஆம் ஆண்டு இறந்த விஜி இப்படத்தின் கதாநாயகியாக நடித்திருந்தார்.
"சந்திப்பு" சிவாஜி பிலிம்சின் வெள்ளிவிழாப் படம். நட்சத்திரப் பட்டாளம் நிறைந்த இப்படம். பிரபல இந்தி நடிகர் அமிதாப்பச்சன் நடித்து வெளியான வெற்றிப்படம் "NAZEEB" இன் தழுவல் ஆகும். சி[illegible]ஜி இரு வேடம் ஏற்று நடித்ததுடன் சரத்பாபு, பி[illegible], ஸ்ரீதேவி எனப் பல நடிகர்கள் நடித்திருந்தார்கள்.

சில்க்சுமிதா



"சட்டம்' கமல், சரத்பாபு இருவரும் இணைந்து நடித்த இப்படம் பாலாஜியின் தயாரிப்பில் உருவான வெற்றிப்படம் ஆகும். "சூரக்கோட்டை சிங்கக்குட்டி" AVM இன் இப்படத்தை இயக்கியவர் இராம நாரயணன். 'மனோகரா' படத்தின் கதையைத் தழுவிய ஒரு சமூகப் படம். பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த இப் படத்தில் பிரபு, ஜெமினி கணேசன், சில்க் சுமிதா ஆகியோர் நடித்திருந்தனர். 100 நாள் வெற்றிப் படமும் கூட. இதே வருடம் வெளியான "தூங்காதே தம்பி தூங்காதே" படத்தை தயாரித்து வெளியிட்டதும் இதே AVM நிறுவனம் தான். கமல் 2 வேடமேற்று நடித்த இப் படத்தில் இனிய பாடல்கள் கொண்டதும் பொழுதுபோக்குச் சித்திரமாக அமைந்து 100 நாள் ஓடி வெற்றி கண்டது ஆகும்.

செந்தில்



ஜெமினி கணேசன்



மலையூர் மம்பட்டியான் படத்தில் தியாகராஜன் மலையூர் மம்பட்டியானாக நடித்திருந்தார். வெற்றிப்படம் சரிதா கதாநாயகியாக நடித்த இப்படத்தில் செந்தில் வித்தியாசமான பாத்திரம் ஏற்று நடித்திரந்தார்.

தில்லானா மோகனாம்பாள் படத்தில நாதஸ்வரக் கலைஞனாக நடித்த நடிகர் திலகம் 'மிருதங்கச் சக்கரவர்த்தி' படத்தில் ஒரு மிருதங்கவித்துவானாக நடித்திருந்தார். பிரபுவும் இப்படத்தில நடித்திருந்தார். மிகப்பெரிய வெற்றிபெற்ற படம் ஆகும்.

இதே ஆண்டில் வெளியான 'வெள்ளை ரோஜா' படத்திலும் சிவாஜி, பிரபு ஆகியோர் நடித்திருந்தனர். இருவேடம் ஏற்று சிவாஜி நடித்திருந்த போதிலும் இவருக்கு ஜோடியில்லாத படம். ஆனால் வெற்றிப்படம்.

### *நடிகர் ஜெய்கணேசன் மரணம்*

புற்றுநோய் காரணமாக சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிரபல தமிழ் திரைப்பட நடிகரும், தொலைக்காட்சி நடிகருமான ஜெய்கணேஷ் காலமாகிவிட்டார். அவருக்கு வயது 55. இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

[illegible]. பாலச்சந்தர் இயக்கத்தில் உருவான 'அவள் ஒரு தொடர்கதை' திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் கால் பதித்தவர் ஜெய்கணேஷ். அதற்குப்பின் வில்லனாகவும், நகைச்சுவை நடிகராகவும், குணச்சித்திர நடிகராகவும் 400க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர். தமிழ் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிப் படங்களிலும் நடித்த இவர் 50 தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்துள்ளார்.

'அவள் ஒரு தொடர்கதை' படத்தில் பொறுப்பற்ற மூத்த சகோதரனாக நடித்து ஏராளமான நடிகர்கள் மனதில் இடம்பிடித்தவர். அதற்குப் பின் 'ஆட்டுக்கார அலமேலு', 'பைலட் பிரேம்நாத்', 'அண்ணன் ஒரு கோயில்', 'உள்ளத்தை அள்ளித்தா' ஆகிய படங்களில் நடித்துள்ளார். 'திரிசூலம்' படத்தில் சிவாஜிகணேசனுடனும், 'சங்கர் சலீம் சைமன்' இல் ரஜினி காந் உடன் நடித்துள்ளார். இவர் கடைசியாக நடித்த தமிழ்ப்படம் 'பார்த்தேன் ரசித்தேன்'. 'சம்பூர்ண ராமாயணம்', மற்றும் 'மிஸியம்மா' தமிழ்த் திரைப்படங்களில் குழந்தை நட்சத்திரமாகவும் நடித்துள்ளார். தொலைக்காட்சி தொடர்கள் 'ரகுவம்சம்', 'சக்தி' ஆகியவற்றில் நடித்துள்ளார்.

## வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் 3 DVD வழங்கப்படும்.



**சினிமா போட்டி # 5**

1. 'சுமங்கலி', 'சந்திப்பு' படங்களின் நாயகன், நாயகி பெயர்?
2. நடிகர் நாகேசின் மகன் ஆனந்தபாபு முதல் முதல் 'Disco' ஆட்டக்காரராக அறிமுகமாகிய தமிழ் படம் எது?
3. 'உள்ளம் கொள்ளைபோகுதே' படத்தின் இசையமைப்பாளர் யார்?

** சினிமாப் போட்டி #4இன் விடைகள்*

1.தேவா 2. நடிகை ராதா
3. சரத்குமார், குஷ்பு


***போட்டி #3இல் வெற்றி பெற்றவர்கள்**

1. T. Kamal, Scarborough

இதற்குரிய விடைகளை March 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் விலாசத்திற்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.

YARLCAN
STEAM CLEANING

CARPET CLEANING



DUCT CLEANING

உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்
மோகன்
Tel: (416) 724-9085
Cell: 721-9709

THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
(CET)
சீலன். A (சிவா)
TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836
email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு $400 இலவசம்



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்



# ஆரோக்கிய வாழ்வு (71)

N. செல்வசோதி

## பெண்களின் ஆரோக்கியமும் மருத்துவமுறை யோகாசனங்களும்

நமது "உலக தமிழோசை"யின் பெண் வாசகர்களே உங்களது ஆரோக்கியத்திற்காக இக் கட்டுரையை எழுதுகின்றேன். உங்கள் உடலில் ஏற்படக் கூடிய சில குறைபாடுகள் பற்றியும் அதன் மருத்துவமுறை யோகாசனங்கள் எவ்வாறு குணமாக்குகின்றது என்பதனைப் பற்றியும் பார்ப்போம். பொதுவாக பெண்களுக்கு அதிக துன்பம் தரக்கூடிய உடல் குறைபாடு என்று பார்த்தால்.

1) மாதவிடாய் கோளாறு
2) உடல் பருமன்
3) இடுப்பு வலி
4) மலச்சிக்கல்
5) உடல் சோர்வு


இவற்றால் அவதிப்படும் பெண்களின் உடல் பிரச்சினைகளை மருத்துவ முறை யோகாசனத்தின் மூலம் எவ்வாறு சரி செய்வது என்பதனை இங்கு பார்ப்போம்.

<u>மாதவிடாய் கோளாறு:</u>

இதனை நான்கு விதமாக பிரிக்கலாம்.

1) மாதவவிடாய் நாட்கள் தள்ளிப் போவது
2) மாதவிடாய் நாட்களில் அதிக இரத்தப்போக்கு
3) மாதவிடாய் நாட்களில் சரியானபடி குருதிப்போக்கு இல்லாதிருத்தல்
4) மாதவிடாய் நாட்கள் முன் கூட்டியே வருவது

இந்த மாதவிடாய் கோளாறுகள் பெண்கள் உடல் வெப்ப நிலைக்குத் தகுந்தபடியும், ஹோமோன்களின் செயல்களுக்குத் தகுந்தபடியும், உணவு முறைக்குத் தகுந்தபடியும், மிக முக்கியமாக உடல் உழைப்புக்குத் தகுந்தபடியும் ஏற்படுகிறது. அதிகமான பெண்களுக்கு இக் குறைபாடுகள் ஏற்படக் காரணம் உடல் உழைப்பு குறைவாக இருப்பதே. இவ் வகையில் பார்த்தால் இந்த நாட்டில் பெண்களின் வீட்டு வேலைகளை 75 வீதம் இயந்திரங்களே செய்து முடித்துவிடுகிறது.



தநூராசனம்

இவ்வாறு பெண்களின் உடல் உழைப்பு குறையும் போது அவர்களது ஹோமோன்களின் செயலும் உடல் வெப்ப நிலையும் உணவு முறையும் சீராக இருக்காது. இவ்வாறு உடல் உழைப்பு குறைவான பெண்களுக்கு கீழ்க் கண்ட சில குறிப்பிட்ட ஆசனங்கள் செய்து வரும் போது இந்த மாதவிடாய் கோளாறுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும். இந்த ஆசனங்களின் முன்பும் பின்பும் சில அடிப்படை ஆசனங்களைத் தவறாது செய்து வந்தால்தான் கீழ்க்கண்ட ஆசனங்களின் பலனை முற்றாகப் பெற முடியும். அதனால் அந்த குறிப்பிட்ட ஆசனங்களை மட்டும் செய்துவிட்டு பலன் கிடைக்வில்லையே என்று வருத்தப்படக்கூடாது.

1) பட்ஸிமொத்தாசனம்
2) தநூராசனம்
3) உசர்ட்டாசனம்
4) கந்தராசனம்
5) மார்ஜாரி ஆசனம்
6) மச்சாசனம்



பட்ஸிமொத்தாசனம்

இவைகளுடன் அடிப்டை ஆசனங்கள் 14 ஆசனங்களை மேற்கண்ட 6 வகையான ஆசனங்களின் முன்பும் பின்பும் செய்து வர வேண்டும். அப்போதுதான் மாதவிடாய் கோளாறுகளிலிருந்து விடுபட முடியும். இந்த 6 மருத்துவமுறை ஆசனங்கள் பற்றி மேலதிக விளக்கம் தேவையாயின் "உலக தமிழோசை" மூலம் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.


அடுத்த இதழில் பெண்களின் உடல் பருமல், இடுப்புவலி, உடல் சோர்வு, சம்பந்தமாக மருத்துவமுறை யோகாசனங்களைப் பார்ப்போம்.

## இலவச பிரசுரம்

ஒவ்வொரு மாதங்களிலும் உங்களால் நடாத்த இருக்கும் நிகழ்ச்சியினையும் எங்களிற்கு தெரியப்படுத்துவதன் மூலம், வேறு ஒரு அமைப்பு நடாத்த இருக்கும் நிகழ்ச்சிக்குப் போட்டியாக அமைவதைத் தடுக்கலாம்.

தொடர்புகளுக்கு: (416) 282-8059


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA PRINTERS




உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
Tel: (416) 410-6401


**PRAYER for PROTECTION**

My loving Miraculous Infant Jesus. I humbly prostrate at your feet I know That you are more powerful, more loving and graceful than any one I can imagine of. I will honour you I will love you more than ever before.

I earnestly ask you to be with me specially when I need you most It is only your care and love that I seek.

Be with me, protect me, guard me guide me and shelter me.—Amen.

Novena to Infant Jesus
Every Thursday at 6.00 p.m.

Devotion to Divine Mercy
Every First Friday at 5.30 p.m.
followed by Eucharistic Half Hour of Prayer Benediction and Mass
at St. Lawrene's Church, Wellawatta.






BALAN APPLIANCES



அனைத்து மின் உபகரணங்களின் திருத்த வேலைகள்



❊ Stove
❊ Washer
❊ Microwave
❊ Dryer
❊ Fridge
❊ Dish Washer

☎: 905-619-3457 Pager: 416-379-1071

# விண்வெளி 55

## அந்நியர்கள்:-பூமியின் சொந்தக்காரர்கள்

தருபவர்:- கனி

நாம் அறிய, பரம்பரை பரம்பரையாகவே மனித இனம் இந்தப் பூமியிலேயே தோன்றி பூமியிலேயே மறைந்து..., தொடர்ந்து கொண்டே போகின்றது. பூமியின் சகல சீவராசிகளுக்குமே இந்த நிகழ்வானது பொருந்துகின்றது. விஞ்ஞான ஆய்வுகளின்படி பூமியில் சகல உயிரினங்களும் சுமாராக 600 மில்லியன் வருடங்களுக்குள்ளாகவே தோன்றியுள்ளன. அதற்கு முன்னதாக எமது பூமியில் எந்தவொரு உயிரினமும், எந்தவொரு வடிவிலும் இருந்ததில்லை, இருந்திருக்கவும் முடியாது என்கிறது விஞ்ஞானம். பூமியின் "அந்நியர்கள்" யார் எனப் பார்க்க முன் பூமியின் சொந்தக்காரர்கள் யார் எனப் பார்க்க வேண்டியுள்ளது அவசியமாகின்றது.

சமயங்களின் கூற்றுப்படி இப்பூமி, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் எல்லாமே இறைவனால் படைக்கப்பட்டது. மனிதன் மற்றும் சகல சீவராசிகளும் இறைவனின் படைப்புக்களே. அதன்படி பார்க்கையில் நாம் அனைவரும் இறைவனின் அருளால் அல்லது ஆணைப்படி இந்தப் பூமியில், பூமியின் சொந்தக்காரர்களாகப் படைக்கப்பட்டவர்களாகின்றோம். [நமக்குள் பேதங்களை ஏற்படுத்தி, வகுப்புக்கள் வகுத்து நிலப் பங்கீடு செய்து குறிப்பிட்ட பகுதிகளை எமதாக்கி...இவை எல்லாம் பின்னால் வந்த வேறு வேறு விடயங்கள்] எனவே பூமியில் காணப்படும் புல், பூண்டு, மரம், செடி, கொடி, பூச்சி, புழு, விலங்குகள், பறவைகள் இவற்றுடன் மனிதர்களாகிய நாம் எல்லாம் இப் பூமியின் சொந்தக்காரர்கள் ஆகின்றோம். எச்சமயமாகிலும் இதுவே மேலெழுந்தவாறான அடிப்படைக் கொள்கையாகும்.

விஞ்ஞான ஆய்வுகளின் படி பார்ப்போமேயாயின் சுமார் பத்து, பன்னிரண்டு பில்லியன் (**Billion**) வருடங்களின் முன்னர் இப் பிரபஞ்சமே இவ்வளவு பெரியதாக இல்லை. பூச்சியக் கனவளவுடைய சிக்கலான ஒரு வடிவில் மிகவும் அடர்த்தி கூடிய "தனிமம்" ஆக இருந்திருக்க வேண்டும். பத்து அல்லது பன்னிரண்டு பில்லியன் வருடங்களின் முன்னர் இத் தனிமம் மிகப்பெரிய வெடிப்புக் குள்ளாகி இருக்க வேண்டும். இதனை "**BIG BANG** -பிக் பாங்" என்கின்றார்கள். இந்த "பிக் பாங்" என்ற மிகப் பிரமாண்டமான வெடிப்பில் இருந்தே இப் பிரபஞ்சம் முழுவதும் தோன்றியது. அன்று முதல் இன்று வரை தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டிருக்கும் இப் பிரபஞ்சத்தில் பல கலக்சிகளினது நட்சத்திரங்களின், உலகங்களின் தோற்றங்களும் மறைவுகளும் தொடர்ச்சியாக, மாறி மாறி நடைபெறுகின்றது. இதன்படியே சுமார் 4 1/2 பில்லியன் வருடங்களின் முன்னர் "பால்வெளி" என்ற கலக்சியில் "சூரிய நெபுலா" என்ற மிகப் பெரிய பிரகாசமான தூசுக் கூட்டத்ததில் இருந்து தோன்றியவைதான சூரியனன் என்ற எமது தாய் நட்சத்திரமும் பூமி உட்பட அதன் ஒன்பது கோள்களும். மிகப் பெரிய சூரியனில் இருந்து காலத்திற்குக் காலம் தனித்தனியாக பிரிந்து வந்து குளிர்ந்து இறுகிய பகுதிகள்தான் இந்த ஒன்பது கோள்களும் என ஒரு காலத்தில் நம்பப்பட்டு வந்தது. இன்னும் சிலர் இந்த நம்பிக்கையையே விடாப்பிடியாகக் கொண்டிருக்கிறார்கள். அதுவல்ல உண்மை. சூரிய நெபுலாவில் இருந்து சூரியன் தோன்றிய பொழுதே பக்கவிளைவாக அதே காலத்தில் தோன்றியவையே இந்த ஒன்பது கோள்களுமாகும். இதனை "சூரியக்குடும்பத்தில்" தெளிவுபடுத்தியிருந்தேன்.

ஆரம்பத்தில் எமது பூமி மேடும் பள்ளமும், குன்றும் குழியுமாக வெறும் கட்டாந்தரை போன்று - நீர்நிலைகள் புல் பூண்டுகள் எதுவும் இல்லாது எரிமலை வெடிப்புக்களைக் கொண்ட தணல் கொதிக்கும் மேற்பரப்புடைய ஒரு பந்து போலவே காணப்பட்டது. காலம் செல்லச் செல்ல மெது மெதுவாய் இறுகி, நீர்நிலைகளையும் தரைப் பகுதிகளையும் கொண்ட மேற்பரப்பாக மாறியதுடன் தனக்கென ஒரு வளி மண்டலத்தையும் உண்டாக்கிக் கொண்டது. பின்னர் படிப்படியான வேதியல் மாற்றங்களினால் சடப்பொருள்களும் [illegible]யும் இணைந்து "ஒரு கல" உயிரினங்கள் தோன்றின. [கொதிக்கும் எரிமலைக் குழம்பு, வாயுக்கள், மின்னல் இவற்றின் சேர்க்கையினால் உயிரினக் கலங்களில் காணப்படும். "அமினோ அமிலங்கள்" உருவாகின்றது என நிரூபிக்கப்பட்டுள்ளது] இம் மாற்றங்களுக்குச் சில பில்லியன் வருடங்கள் எடுத்திருக்கும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இந்த ஒரு கல உயிரினங்கள் சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றி மாற்றி ஒன்றுடன் ஒன்று இணைந்து வேறும் பல தாக்கங்கட்குட்பட்டு பரிணாமா வளர்ச்சியடையத் தொடங்கின. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் தொடர்ச்சியாக ஏற்பட்ட இரசாயன மாற்றங்கள், பரிணாம வளர்ச்சிகளின் ஊடாக சிறு சிறு உயிரினங்கள் தோன்றி அவற்றில் இருந்து புல், பூண்டு, மரம் என்பனவும் பூச்சி, புழு, பறவைகள், மிருகங்கள் என்பனவும் தோன்றி இறுதியில் மனிதனும் தோன்றினான் என்கிறது விஞ்ஞானம். விஞ்ஞான விளக்கப்படி பார்த்தால் மனிதன் உட்பட சகல உயிரினங்களுமே காலத்திற்கு காலம் ஏற்பட்ட தொடர்ச்சியான இரசாயன, பரிணாமா மாற்றங்களினாலேயே இப் பூமியில் தோன்றின என்கிறது. அதற்கு மிகப் பொருத்தமாக பூமியின் சூழ்நிலை அமைந்துள்ளது. புகழ் பெற்ற டாவினின் கொள்கையும் இதுவே ஆகும். மதவாதிகள் அல்லது மத ஆய்வாளர்கள் சிலர் டாவினின் கொள்கை பொய்யானது, சரியாக நிரூபிக்கப்பட முடியாது என்று கூறுகின்ற போதிலும் பொதுவாக விஞ்ஞானிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் படி பார்க்கையில் நமது மனித இனம் பூமியில் தோன்றிய காலம் சுமாராக மூன்று மில்லியன் வருடங்களுக்குள்ளாகவே இருக்க வேண்டும். எப்படி ஆயினும், விஞ்ஞானப்படி பார்த்தாலும் கூட மனிதன் இந்தப் பூமியின் சொந்தக் குழந்தையாகின்றான்.

ஆக, விஞ்ஞான விளக்கப்படி ஆயினும் சரி, மதங்களின் கூற்றுக்களின் படியாயினும் சரி மனிதனும், இன்று பூமியில் காணப்படும் எல்லா உயிரினங்களும் பூமியின் சொந்தக்காரர்கள் ஆகின்றார்கள். இது சரியா எனக் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால்...தடுமாற வேண்டி வருகின்றது. அவற்றை மறு இதழில் பார்ப்போம்.





**இலவச பிரசுரம்**

ஒவ்வொரு மாதங்களிலும் உங்களால் நடாத்த இருக்கும் நிகழ்ச்சியினையும் எங்களிற்கு தெரியப்படுத்துவதன் மூலம், வேறு ஒரு அமைப்பு நடாத்த இருக்கும் நிகழ்ச்சிக்குப் போட்டியாக அமைவதைத் தடுக்கலாம்.
தொடர்புகளுக்கு: **(416) 282-8059**

**காப்புறுது / இன்சூரன்ஸ்**

எங்களில் தங்கியுள்ளவர்களிற்கான நியாயமான பாதுகாப்பு

**LIFE INSURANCE**

| Age | $100,00 m/f | $250,000 m/f | $500,000 m/f |
|---|---|---|---|
| 30 | 11.34/9.90 | 17.50/15.00 | 29.25/23.85 |
| 35 | 12,06/10.17 | 18.68/16.43 | 31.50/26.55 |
| 40 | 13.14/12.24 | 22.28/20.00 | 40.00/32.40 |
| 45 | 17.46/14.22 | 30.15/24.98 | 53.35/44.10 |
| 50 | 23.49/17.01 | 42.50/32.18 | 80.00/59.40 |
| 60 | 50.67/30.00 | 92.50/72.00 | 180.00/138.15 |
| 65 | 79.20/54.09 | 175.00/115.45 | 345.00/209.17 |

தொடர்புகளுக்கு: **Paul Ram Narayan** ☎: **(416) 414-2202**
Life & Investment Broker

## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



### மனிதாபிமானம்

உலகில் மனிதனாகப் பிறப்பதற்கு அரிய தவம் செய்து இருக்க வேண்டும் என்று சொல்வதுண்டு. அரிய தவம் செய்து எடுக்கும் மனிதப் பிறவியில் கூன், குருடு, செவிடு என்பது முதலாக கொடிய நோய், நொடிகளுக்கும ஆளாகுவதுடன் தேவையற்ற அழிவுகளுக்கும் அம்மனித வாழ்க்கை மனிதர்களை இட்டு செல்வதேன்? இப்பிறவியில் நன்மையே செய்து நல்லவனாக நடந்தால் அடுத்த வாழ்க்கை நல்ல வாழ்க்கையாக அமையும் என்று சொல்வோர்களும் உண்டு. அடுத்த வாழ்க்கை அல்லது அடுத்த பிறவி ஒன்று இருக்கின்றது என்பதற்கு என்ன ஆதாரம்? இப்படியே ஒவ்வொன்றுக்கும் பதில் தேடிக் கொண்டு போனால் பதில் கிடைப்பதை விட கூடுதலான கேள்விகளே எம்மிடத்தில் மிஞ்சும். ஆனால் ஒன்று மட்டும நிச்சயம். இந்த பிறவியில் நன்மைகள் செய்தால் அடுத்த பிறவியில் நல்ல வாழ்க்கை கிடைக்கின்றதோ இல்லையோ மனிதத் தன்மையுடன மனிதத்தை போற்றி மனிதாபிமானத்துடன் நடந்தால் மனதில் நிம்மதியும் எம்மைப் பற்றி நாமே உயர்வாக எண்ணிக் கொள்ள சந்தர்ப்பமும் எமக்கு நிச்சயமாக கிடைக்கும். பூனை கண்ணை மூடிக் கொண்டு பாலைக குடித்தாலும் அந்தப் பூனைக்கு தெரியும் தான் பால் குடிப்பதாக. அதுபோலவே கெட்டித்தனமாக களவு செய்பவனுக்கு தெரிதும் தானொரு ஒரு கள்ளன் என்று. நல்லவனுக்கு தான் செய்யும் நன்மைகளால், தான் ஒரு நல்லவன் என்று தெரியவரும் போது உண்டாகும் போதையில மனிதாபிமானத்தை போற்றி தேடித் தேடி நன்மைகள் செய்ய அந்த போதை அவனை தூண்டுகின்றது.

இயற்க்கை சில வேளைகளில் பூமியின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் பூமி நடுக்கம், பெருவெள்ளம், புயல்காற்று, நெருப்பில் அழிவு போன்ற பல அழிவுகளை தோற்றுவிப்பதுண்டு. பலஇடங்களில் பல பாகங்களிலும் இடை இடையே நிலநடுக்கம் உண்டாகி மனித இனம் அழியும் போது அதை தொலைக்காட்சியில் பார்க்கும் போது மனிதாபிமானமுள்ள ஒருவனுக்கு பச்சாதாபம் உண்டாகின்றது. அழிகின்ற மனித இனத்தால் அந்த பகுதிகளில் எஞ்சி வாழ்கின்ற பாதிக்கப்பட்டவர்கள மீது பரிதாபம் உண்டாகின்றது. ஏதோ எம்மால் ஆன உதவியை அவர்களுக்கு செய்ய வேண்டும் என்று எண்ணத் தூண்டுகின்றது. ஒரு நாட்டில் அழிவு உண்டாகும் போது மற்றய நாட்டு மனிதர்களும் அரசாங்கங்களும் முன்னின்று உதவி செய்வதை பார்க்கும் போது பூமியில் மனிதம் வாழ்வதாக எண்ணத் தோன்றுகின்றது.

அண்மையில் இந்திய மாநிலமான குஜராத்தில் உண்டான நிலநடுக்கத்தில் எற்கபட்ட அழிவுகளை பார்க்கும் போது நெஞ்சம் பதறுகின்றது. இந்திய அரசாங்கம் மற்றய நாடுகளை உதவி வேண்டி கேட்காத போதும் இந்தியாவின் எதிரி நாடாக இன்று கருதப்படும் பாகிஸ்தான் நாடு ஓடிச சென்று உதவி செய்வதை பார்க்கும் போது மனித நேயத்தை எண்ணி மனம மகிழ்ச்சி அடைகின்றது. அழிந்தது ஐம்பதினாயிரத்தையும் தாண்டிவிட்டது என்றும் சிறுகுழந்தைகள் பெற்றோர்களை இழந்தும், பெற்றோர்கள பிள்ளைகளை இழந்து மற்றோர்கள் உறவினர்களை இழந்தும் அவர்கள் படும் பாடுகளை தொலைக்காட்சியினூடாக பார்க்கும் போது நெஞ்சம் பதைக்கின்றது. எமது நாட்டில் எமது இனத்திற்து உண்டான அழிவின காரணமாக இந்த மண்ணில் வந்து வாழும் எமது இனத்தவர்கள் கூட இந்தியாவில் உண்டான அழிவுகளை காணும் போது எமக்கிடையே உள்ள கலாச்சார ஒற்றுமை காரணமாக ஒருவித நெருங்கிய உணர்வுடன் ஓடிச் சென்று தம்மால் ஆனதை செய்வதை பார்க்கும் போது மனம் பெருமை கொள்கின்றது.

ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை ஒரு சில விநாடிகளில் இழந்தது. அத்துடன் பெரும் அழிவை சந்தித்த இந்திய நாடு. 20 வருடங்களுக்கு மேலாக சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு ஐம்பதினாயிரம் பேர்களுக்கு மேலாகவும் பெற்றோர்களை பிள்ளைகளை உறவினர்களை உடல் பாகங்களை, பொருட் சேதங்களை இழந்து இன்னும் தொடர்ந்து அழிந்து கொண்டு இருக்கும் ஈழத்தமிழ் மக்களின் வாழ்க்கையோடு அரசியல் சதுரங்கம் ஆடாமல் அழிவினால் உண்டான பாதிப்பை மனதில் கொண்டு மனிதாபிமானத்துடன் நடந்து தமிழ் மக்களின் அழிவை தடுக்க வகை செய்ய வேண்டும்.

சிந்தனை தொடரும்.....

*பரம். G.*
*ஒரு சாதாரண மனிதன்*


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் ரவி நடராஜா
தற்போது இரண்டு இடங்களில் சேவையாற்றுகின்றார்

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் நஷ்டஈடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய நஷ்டஈடுகள், மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



*Accident & Traffic Ticket* (12 Years Insurance Claims Experience)

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.



ரதீக்கா நகை மாளிகை

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
